







நேற்று (23.08.2024) காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட குன்றத்தூர் நத்தம் பகுதியில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தை குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழகப் பொருளாளர் – திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு மற்றும் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை ஆகியோர் திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன் ஆகியோர் உள்ளனர்.

### கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. – மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு!

# குன்றத்தூரில் ரூ.7.03 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் – டி.ஆர்.பாலு எம்.பி. திறந்து வைத்தனர்!

காஞ்சிபுரம், ஆக.24-

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், நேற்று (23.08.2024) குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு மற்றும் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர்கு.செல்வப்பெருந்தகை ஆகியோர் ரூ.7.03 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை திறந்து வைத்து, புதிய கட்டிட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26-இல், அம்ரூத் 2.0 திட்டம் 2022-23-ன் கீழ், ரூ.212 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்ட பாலவராயன் குளத்தினையும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023—24 கீழ் ரூ.14.50 இலட்சம் மதிப்பீட்டில் மேத்தா நகரில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி கட்டிடத்தையும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023-2024ன் கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 மேத்தாநகரில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நியாயவிலைக்கடை மற்றும் குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட குன்றத்தூர் நத்தம் பகுதியில் ரூ.13.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி கட்டிடத்தையும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022ன் கீழ், குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட வெங்கடாபுரத்தில் ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள எரிவாயு தகன மேடையும் என மொத்தம் ரூ.4.05 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து,

ஆறாவது மாநில நிதிக்குழு 2022-2023ன் கீழ், குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட கொல்லைத் தெருவில் ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில், 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல் பணிக்கும், ஆறாவது மாநில நிதிக்குழு 2023-2024ன் கீழ், குன்றத்தூர் நகராட்சி வார்டு எண்.28 கொல்லைத் தெருவில் ரூ.148 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் அமைக்கும் பணிக்கும் என ரூ.2.98 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணியினை தொடங்கி வைத்தார்கள்.

இதற்கு முன்னதாக குன்றத்தூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணவ/ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டியை குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர்படப்பைஆ.மனோகரன், குன்றத்தூர் நகரமன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி, குன்றத்தூர் நகராட்சி பொறியாளர் திருமதி. தா. உஷாராணி குன்றத்தூர் நகராட்சி ஆணையர், (பொ) திருமதி.மு.ராணி, உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை! க.செல்வம் எம்.பி. பங்கேற்பு!

# சாலவாக்கம் ஒன்றியக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் டி.குமார் அறிக்கை!

காஞ்சிபுரம், ஆக.24,

சாலவாக்கம் ஒன்றியக் கழகச் செயலாளர் டி.குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சாலவாக்கம் ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (25.8.2024 - ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 12 மணிக்கு சமுதாய அரங்கம் பொற்பந்தலில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய அவைத்தலைவர் என்.எஸ். ரவி தலைமை வகிக்கிறார். வி.ஞானசேகர், ஜெ.சுஜாதா ஜெயராமன், பி.வெ.பாலமுருகன், ஆர்.வெங்கடசுப்பிரமணி, வி.பாண்டியன், ஐ.பாபுஷரீப் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் சிறுவேடல் க. செல்வம் எம்.பி.,கெ.ஞானசேகரன், இரா.நாகன், ஞா. ஹேமலதா, கு.வசந்தி கோ. சிவராமன், எஸ்.ஆர்.வெங்கடேசன், ப.சசிகுமார், என். எஸ்.பாரிவள்ளல், கு.துரைவேல், என்.ரவி, ப.கார்த்திகேயன், பெ.மணி, த.சத்தியமூர்த்தி, எஸ்.ரத்தினமாலா, எஸ்.முரளிதரன், எஸ்.ஆர். அப்பாதுரை, எஸ்.பி.நடராஜன், ஏ.அரசு, ஆர்.செந்தில்குமார், கே.கார்த்திகேயன், பி.சுப்பிரமணி, க.பழனி, க.பழனிவேல், சரண்யா அலெக்ஸ், பி.வி.குப்புசாமி, ஜெயமணி முருகேசன், குட்டியம்மாள் பாஸ்கர், கே. மாதவபிள்ளை, பி.முனியன் பிள்ளை, வி.சோலை பிள்ளை, எஸ்அன்புகுட்டி, ஒய்.செல்வராஜ்., கே.கைலாசம், எம்.மணி, வி.விநாயகம், சங்கர் கிராமணி, பி.சேகர், ஆர்.சந்திரா, பவுன்சின்ராஜ், ஆர்.கல்யாணசுந்தரம், நதியாகோபி, த.அன்புராஜ், தீபாகாமராஜ், க.வெங்கட்ராமன், டி.கோகுலகண்ணன், சு.பலராமன், இ. நந்தா, பி.வி.அழகப்பன், செ.விஷ்ணு, ஆர்.விஜயா, சி.வீரம்மாள், மாசிலா கோபி,எஸ்.கௌரிநாதன், எ.தர்மராஜ், ஜெயபுரி ராஜேஷ், செல்வி, எஸ். பி.வி.எஸ்.சத்தியா, சக்திவேல், பி.வெங்கடேசன், எ.தர்மராஜ், நாகம்மாள் மாரி, தா.சுந்திரமூர்த்தி, கே. கோதண்டராமன், சுதாலட்சுமி செல்வகுமார், சுதாஜா ஜெயராமன், சற்குணம் மாதவன், பூங்கோதை சேட்டு, கே.வெங்கட்ராமன், பொன்மொழி சுபாஷ், தேன்மொழி மணி, மஞ்சுளா முருகன், ஜெயகாந்தி முரளி, கோமளப ஜயப்பன், சுப்பம்மாள் தம்பிப் பெருமாள், ஏ.இ.பாலு, பி. சுப்பிரமணி, இந்திரா மோகன், பி.இராமச்சந்திரன், எஸ்.பிருந்தாவதி, கலைச்செல்வி கோதண்டராமன், கே.முனுசாமி, எழிலரசி யுவராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

அது போது கழக முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவிருப்பதால் சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஒன்றயச் செயலாளர் டி.குமார் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருத்தணி ஒன்றியம் கிருஷ்ணா சமுத்திரத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் அப்பகுதி பொது மக்களை சந்தித்து குறைகளை கேட்டு அறிந்து உடனடியாக அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செய்து தரப்படும் என்று தெரிவித்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் என்.கே.கிருஷ்ணன் உள்பட பலர் உள்ளனர்.